தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2023

**18 - 22 வயதுப்பிரிவு**
(01.01.2001 – 31.12.2005 வரையில் பிறந்தோர்)

## வன்பறிப்புச் செய்யப்பட்ட எம் தாயகத்தை மீட்போம்

நாங்கள் ஈழத்தமிழர்கள். எங்களுடைய தாய்நாடு தமிழீழம். ஈழத்தீவின் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், அம்பாறை, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, புத்தளம் மாவட்டங்கள் அடங்கிய நிலப்பகுதி தமிழீழம்.

தொன்மைச் சிறப்போடு அறவழி தவறாத படை மாட்சியும், நானிலம் போற்றிய நல்லாட்சியும், வையகத்து அறிவியலில் தேர்ச்சியும், தன்னிறைவு கொண்ட பொருண்மிய வளர்ச்சியும் இத்தனைக்கும் சீரிய வழிகாட்டி நின்ற பெருந்தலைவனையும் பெற்று நிமிர்ந்து நின்றது எங்கள் தாயகம். எமைக் கண்டு வியந்து நின்றது வையகம்.

அல்லும் பகலும் எல்லையிலே காவல் புரிந்த வேங்கைப் படையணிகள்! தொல்லைகள் இல்லாத தொலைதூரப் பயணங்கள்! அச்சம் என்பதே சற்றும் இல்லாமல் சுற்றங்கள் சூழ்ந்திருந்த இனிமையான பொழுதுகள்! தமிழ் அன்னை அகமகிழ்ந்து அமர்ந்திருந்த கல்விக்கூடங்கள்! வண்ணத்துப் பூச்சிகளாய் சிறகு விரித்துத் திரிந்த பள்ளி வீதிகள் என அனைத்தும் இருந்தன.

பெற்றவரை உற்றவரைப் பிரிந்து, தலைவன் வழிகாட்டலைச் சிரமேற்று, பகல் இரவு பாராது, ஊண் உறக்கம் நாடாது, நெடுங்காலம் பகை வாசல் காத்திருந்து, பல செய்தி சேகரித்து, பக்குவமாய் பாதுகாத்து வெற்றிச் சமர்களுக்கு வேவுத்தகவல் தந்தவர்கள்! தரை, கடல், வான் வழி களமாடியவர்கள்! மண்மீட்புப் போரிலே தங்கள் இன்னுயிர் ஈந்த கல்லறைத் தெய்வங்கள் உறைகின்ற துயிலுமில்லங்கள்! உணர்வெழுச்சியுடன் நவம்பரிலே செங்காந்தள் மலர் ஏந்தித் தமிழீழ தேசமே மாவீரரை வணங்கி நின்ற பொழுதுகள்!

இவை தமிழீழத் தாய்நாட்டில் எந்தையும் தாயும் மகிழ்ந்திருந்த காலத்தின் வரலாற்றுப் பதிவுகள்.

இப்போது விடுமுறை காலத்தில் நான் பார்த்த எம் தேசத்தில் இவை எதுவுமே இல்லை! விழி நீர் வழிந்தோட விக்கித்து நின்றது என் தேகம்! எமக்குள் நினைவுகள் மட்டுமே மிச்சமாய் நிற்க, எச்சங்கள் இன்றி அழித்தொழிக்கப்படுகிறது எம் தாயகம்! அடையாளம் இழந்து, பூர்வீகம் தொலைத்து, பண்பாட்டுச் சிதைவுக்குள் எம்மினத்தைத் திட்டமிட்டுத் தள்ளுகிறது சிங்கள அரசு! மது, போதைப்பொருள்களைத் தாராளமாக்கி, தமிழின அழிப்பின் ஒரு வடிவமாக எமது இளந்தலைமுறையைக் காவுகொள்கின்றனர். வல்லரசுகளின் அரசியலில் சூறையாடப்பட்டுக்கொண்டிருக்கின்றன எம் தேசத்து வளங்கள்! மேய்ப்பர் அற்ற மந்தைகளாய் வழிமாறிப் போகிறது எம் இளந்தலைமுறை!

போராட்ட வாழ்வின் சுமைகளைச் சுமந்து, மண் மீட்புப் போருக்காய் தங்கள் உறவுகளைத் தந்து, உடல் உறுப்புகளை இழந்து, தாங்க இயலாத வலிகளைத் தாங்கி, வனப்பிழந்து, வாழ்வைத் தொலைத்து வாடுகின்ற எங்கள் தேசத்து உறவுகளின் உயிர் பிழியும் வலிகளை எவ்வாறு ஆற்றுவது? அதற்கு, பழமைச் சிறப்போடும் புலியின் நிமிர்வோடும் எமக்கு வேண்டும் எம் தாயகம். வன்பறிப்புச் செய்யப்பட்ட எம் தாய்நாட்டை மீட்பதே எமக்கான ஒரே வழி! இதற்காக உழைக்க வேண்டிய பொறுப்பும் உரிமையும் வளமும் உடையவர்கள் புலம்பெயர் தமிழர்களாகிய நாங்களே! இன்றைய இந்த வரலாற்றுக் கடமையிலிருந்து இளையோராகிய நாம் விலகி நிற்காது, எல்லோரும் ஒன்றிணைந்து உழைப்போம்.

நன்றி,
வணக்கம்.